7. அமைச்சரின் அறிக்கை

விதி 111-ன் கீழ் சென்னை பெருநகர், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத் தொழிலாளர்கள் குறித்து வேளாண்மைத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சரவர்கள் 111—வது விதியின்கீழ் ஒரு அறிக் கையைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

(முற்பகல் 11—20)

திரு. மு. இராமநாதன்: * * *

(திராவிட முன்னேற்றக்கழகத்தினர் வெளிநடப்பு செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** இதுவரை நடந்த வற்றை நீக்குகிறேன். 111-வது விதியின் கீழ் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 1—4—1986 அன்று சட்டப் பேரவையில் வரவு-செலவுத் திட்ட மானியக் கோரிக்கை எண். 49 குடிநீர் வழங்கல் பற்றிய விவா தத்தின் மீது சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தில் உள்ள தற்காலிகத் தொழிலாளர் களை வாரியத்தின் முறையான பணியாளர்களாக நியமிப்பது பற்றி குறிப்பிடப்பட்டன. அதுசமயம் அப்பொருள் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை நிறை வேற்றுவதற்கு விரைவிலேயே ஆணையிடப்படும் என்று பேரவை யிலே தெரிவித்தார்கள். சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தில் பணிபுரிந்துவரும் தொழி லாளர்கள், தொழிலாளர் பிரிவிலிருந்து பணியாளர் பிரிவிற்கு தங்களைக் கொண்டுவரும்படி கேட்டுக்கொண்டுள்ளனர். இவர் களை பணியாளர் பிரிவிற்கு மாற்றினால், வீட்டு வசதி, மருத்துவ செலவு ஈடு செய்யும் பணம், ஓய்வு ஊதியம், குடும்ப ஊதியம், தனி வருங்கால வைப்பு நிதி, பொது வருங்கால வைப்பு நிதி, ஆயுள் ஈட்டுறுதி நிதி போன்ற சலுகைகளுக்குத் தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

மேற்கண்ட கோரிக்கையை நிறைவேற்ற அரசு முடிவு செய் துள்ளது. இதற்கான ஆணை இன்று பிறப்பிக்கப்படுகிறது என் பதை நான் மகிழ்ச்சியோடு இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களின் அரசு சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றும் என்பதற்கு இதை எடுத்துக்காட் டாகவும் தொழிலாளர்களின் மே தினப் பரிசாகவும் இதை நான் அறிவிக்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு நிலைமை விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு மேலப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சம்சுல் ஆலம் அவர்கள் ஒரு புகார் சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்தப் புகாரை, எழுதிக் கொடுங்கள், அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இன்னும் அவர்கள் எழுதிக் கொடுக்கவில்லை. ஆகவே, அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கான இடம் கொடுப்பது தேவையில்லை. அப்படி எழுப்பினாலும் கூட இங்கே அந்தப் பிரச்சினையைத் தீர்க்க நம்மால் இயலாது. அதனை பேரவைத் தலைவர் அவர்கள்தான் விசாரிக்க வேண்டும். எழுதிக் கொடுத்ததற்குப் பிறகு உரியவர்கள் யார் என்று கேட்க வேண்டும். அதற்கு சாட்சிகள் கொடுக்க வேண்டும். சாட்சிகள் வந்ததற்குப் பிறகு முடிவெடுக்க வேண்டும். அவ்வாறு முடிவெடுத்த பிறகு இந்த அவைக்குத் தெரிய வேண்டிய அவசியம் வந்தால் தெரிவிக்கலாம். அப்படித் தெரிவிக்கிறபோது, தெரிவிக்கின்ற நிலைமையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம்.

என்னிடத்திலும் வந்து அவர் சொன்னார். புகார் எழுதித் தாருங்கள். முறைப்படி நடந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உரிமையைக் காப்பாற்றவும், பாதுகாப்பு கொடுக்கவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பெறும் என்று அவரிடத்திலே நான் சொன்னேன். அவர்களும் அமைதியாகத்தான் கேட்டுக்கொண்டார்கள். எழுதித் தருகிறேன் என்று சொன்னார்கள். இன்னும் எழுதித் தரவில்லை. எழுதித்தந்தால் அதன் மீது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மட்டும் நான் கூறிக்கொள்கிறேன்.

6. வரவு செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி
(உ) கோரிக்கை எண் 36—பாசனம்

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 64,86,31,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு ஒதுக்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 64,86,31,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."